முஸ்லிம் அல்லாதவர்கள்,
இஸ்லாம் குறித்த
ஐயங்களை
மனம் விட்டுப்பேச...



Toll Free:
1800 2000 787

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# அழைப்பொலி

ஓங்கி ஒலிக்கும் எட்டுத் திக்கும்...

இறைச்செய்தியை இலவசமாகத் தாங்கி வரும் முதல் இஸ்லாமிய மாத இதழ்

மாதந்தோறும் 'அழைப்பொலி' மாத இதழ் உங்கள் மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ்அப்பிற்கு தேடி வர ஒரு குறுஞ்செய்தி அனுப்புங்கள்

மின்னஞ்சல்:
azhaippoli2017@gmail.com

வாட்ஸ்அப்:
98849 28787

அழைப்பு: 1 ஒலி: 5 | முஹர்ரம் – ஸஃபர் 1439 | அக்டோபர் – நவம்பர் 2017 | தனிச்சுற்றுக்கு மட்டும்

## ரோஹிங்ய முஸ்லிம்கள் அறிமுகமும்! அவஸ்தையும்!!

A. அன்ஸார் ஹுசைன் ஃபிர்தவ்ஸி






நாம் வாழுகின்ற இந்தக் காலக்கட்டத்தில், உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் பல இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். பர்மா என்கிற மியான்மர் நாட்டில் வாழும் ஒரு பகுதி முஸ்லிம்கள் துன்புறுத்தப் படுகிறார்கள். எரிக்கப்படுகிறார்கள். பெண்கள் கற்பழிக்கப்படு கிறார்கள். கொல்லப்படுகிறார்கள். இப்படிப்பட்ட அவலச் சூழ்நிலை நிலவும் இச்சமயத்தில், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொல்லிச் சென்ற ஒரு வாக்கு நினைவுக்கு வருகிறது.

"என் உயிர் எவன் கைவசத்தில் உள்ளதோ அவன் மீது சத்தியமாக, மக்களிடையே ஒரு காலம் வரும். அப்போது கொலை செய்கின்ற ஒருவன் தான் எதற்காக கொலை செய்கிறோம் என்பதே தெரியாமல் கொலை செய்து கொண்டிருப்பான். கொலை செய்யபடுகின்ற ஒருவன் தான் எதற்காக கொலை செய்யப்படுகிறோம் என்று தெரியாமாலேயே கொலை செய்யப் படுவான் என்று நபிகள் நாயகம்(ஸல்) கூறினார்கள்."

(நூல்: முஸ்லிம்)

உலகமுடிவு நாளிற்கான அடையாளங்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்ன முக்கியமான அடையாளங்களில் ஒன்று, கொடுர கொலைகள் அதிகரிக்கப்படும் என்பதாகும்.

மியான்மரில், ஆசியாவின் கிழக்குப் பகுதியில் ரங்கூன் என்று அழைக்கப்படுகின்ற பாரம்பரியமிக்க நாடுதான் இந்த பர்மா. பர்மாவிற்கும் இஸ்லாமியர்களுக்கும் குறிப்பாக, இஸ்லாமிய கலாச்சாரத்திற்கும் நெருக்கமான தொடர்புகள் உண்டு. பர்மாவில், அராக்கான் என்ற பகுதியில் வாழுகின்ற மக்களில் கணிசமான சதவிகிதத்தில் இஸ்லாமிய மக்கள் இருக்கின்றார்கள்.

அந்த முஸ்லிம்களில் ரோஹிங்யர்கள் என்று அழைக்கப்பட்ட சாரார், காலங்காலமாகவே சிறுபான்மையாக, அந்த அரசாங்கத்தால் குடிமக்களாகக் கூட அங்கீகரிக்கப்படாமல் வாழ்ந்து வந்தார்கள். இதில் வியப்பு என்னவென்றால், எந்த அரசாங்கத்தால் குடியுரிமை கூட வழங்கப்படாமல் முஸ்லிம்கள் வாழ்ந்தார்களோ, அதே முஸ்லிம்களிடத்தில்தான் சுமார் மூன்றரை நூற்றாண்டுகளாக இதே "அராகா" என்ற பகுதி இஸ்லாமியர்களிடத்தில் இருந்தது.

ஆனால், இன்று அமைதியைப் போதித்து, சமாதானத்தைப் பறைசாற்ற வேண்டும் என்று சொல்லுகின்ற பௌத்த மதத்தவர்களாலேயே அமைதியும் சமாதானமும் குலைக்கப்பட்டு, கொடூரமாக மக்கள் கொலை செய்யப்படுகின்றார்கள்.

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

## உலகக் கடிகாரத்தைக் கண்டுபிடித்த கடைக்கோடி மனிதர்!




வாழ்க்கையில் ஏற்படுகின்ற இன்ப துன்பங்களை, சாதக பாதகங்களை, இலாப நஷ்டங்களை, வெற்றி தோல்விகளை சந்திக்கின்ற சராசரி மனிதனாக வாழ்ந்து விட்டு, திடீரென மரணம் வந்தவுடன் வாழ்க்கைக்கு விடுமுறை தந்து விடைபெற்றுச் செல்லும் எளிய மனிதர்கள் வாழும் பூமி இது...

ஆனால், இங்கே எளிய மனிதராக திகழ்ந்து உயரிய சிந்தனையோடு, இலட்சிய நோக்கத்தோடு, சீரிய செயல்பாடுகளோடு ஓர் உன்னதப் பணியை தொடங்கி பல பிரம்மாண்ட மர்மப் பூட்டுகளைத் திறப்பதற்கு முயன்று கொண்டிருக்கிறார் இந்த கடைக்கோடி மனிதர்! அந்தப் பாதையின் பயணத்தில் கண்டுபிடித்ததே இந்த உலகக் கடிகாரம்...

விஞ்ஞானத்தைப் புரட்டிப்போடும் இந்த கடிகாரத்தை நாம் அறிந்து கொள்வது மிக்க அவசியமாகிறது...

தொடர்ச்சி 5ஆம் பக்கம்


### உள்ளே...

ரோஹிங்ய முஸ்லிம்கள் அறிமுகமும்! அவஸ்தையும்!!



2

புளூவேல் – விளையாட்டு விழிப்பு உணர்வு வேண்டும்!



4

"உலகக் கடிகாரத்தைக் கண்டுபிடித்த கடைக்கோடி மனிதர் சையத் ஹஸன்."



5

பொறுத்தார் பூமி ஆள்வார்!



7




# ரோஹிங்ய முஸ்லிம்கள் அறிமுகமும்! அவஸ்தையும்!!

முதல் பக்கத் தொடர்ச்சி

உலக அளவில் அமைதியும் சமாதானமும் நிலவ வேண்டும் என்பதற்காக இரண்டாம் உலகப் போர் முடிந்த பிறகு, உருவாக்கப்பட்ட ஐ.நா. போன்ற சர்வதேச சபைகளெல்லாம் இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் காட்டுமிராண்டித் தனமான முறையில் மியான்மரில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதை போர் என்றும் சொல்ல முடியாது! கலவரம் என்றும் சொல்ல முடியாது! அங்கு இருக்கிற புத்த மதத்தவர்களும், ஆட்சியாளர்களும், ராணுவமும், காவல் துறையும் என எல்லாருமாய் இணைந்து, நிராயிதபாணியாய் நிரபராதியாய் நின்று கொண்டிடுருக்கும் முஸ்லிம்கள் மீது இனத்தாகுதல்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஐந்து கோடி மக்கள் அந்தத் தேசத்தில் வாழ்வதாகச் சொல்லப்படுகின்றது. ஐந்தில் ஒரு பங்காக முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

பௌத்தம் என்றாலே, அவர்களெல்லாம் துறவிகள் உலகத்து இன்பங்களிலிருந்தும், துன்பங்களிலிருந்தும், ஏன் இல்வாழ்கையில்கூட ஈடுபடாமல் இல்லறத்தைக் கூட தியாகம் செய்து துறவரத்தை மேற்கொண்டு கடவுளின் நெருக்கத்தைப் பெறுவதற்காக இந்த உலகத்தில் வாழ்கின்றவர்கள். ஆனால், இவர்கள் இன்று மிகக் கொடூரமாக முஸ்லிம்களை அழித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கொடூரத் தாக்குதல் *1948*ஆம் ஆண்டிலிருந்தே துவக்கப்பட்ட தாக்குதல்தான். என்றைக்கு பௌத்தர்களிடத்தில் ஆட்சி வந்ததோ அன்றிலிருந்தே முஸ்லிம்கள் கொடூரமாக தாக்கப்பட்டு வருகின்றார்கள்.

### பௌத்தர்களின் குற்றச்சாட்டு

பௌத்தர்கள் முஸ்லிம்கள் மீது வைக்கின்ற குற்றச்சாட்டுகள் என்ன தெரியுமா? முஸ்லிம்கள் சவூதிக்கு விசுவாசிகளாக இருக்கின்றார்கள். முஸ்லிம்கள் பங்களாதேஷிலிருந்து குடியேறியவர்கள். இங்கே இருக்கின்ற நிலங்களை எல்லாம் இஸ்லாமிய நாடுகளுக்காக வேண்டி பாதுகாத்துக் கொண்டிருகிறார்கள். என்பது போன்ற பொய்யான குற்றச்சாட்டுகளை பௌத்தர்கள் முஸ்லிம்கள் மீது தொடுத்து தங்களை நியாயப்படுத்துவதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

### ரோஹிங்யர்களின் அவல நிலை

ரோஹிங்ய முஸ்லிம்களுக்கு குடியுரிமை கிடையாது. அடையாள அட்டை கிடையாது. அவர்கள் பாதுகாப்பாக இருக்க எந்த அரசாங்க உரிமையும் கிடையாது. அவர்கள் அங்கு பிறந்தால் பிறப்புக்கு பதிவுச்சான்றும் கிடையாது. இறந்தால் இறப்புச்சான்றிதலும் கிடையாது. கல்வி உரிமை இல்லை. அரசாங்கத்தின் எந்த உதவித் தொகையும் இல்லை. எப்படியாவது தங்கள் வாழ்வாதாரத்தை நடத்தியாக வேண்டும்.

ஒவ்வொருவருக்கும் அங்கே நிலங்கள் இருக்கும். அவரவர் அந்தந்த நிலத்தில் விவசாயம் செய்து பிழைத்துக் கொள்வார்கள். பிற்காலத்தில் அந்த நிலங்களும் கைப்பற்றப்படும். விவசாயத்தில் விளையும் காய்கறிகளுக்கு மட்டுமல்லாமல், அவர்களின் நிலங்களுக்கும் வரி கட்டியாக வேண்டும். ஒரு மாடு இருந்தால் அதற்கென்று ஒரு வரி. அந்த மாடு குட்டியை ஈன்றால் அதற்கென்று ஒரு வரி. ரோஹிங்ய முஸ்லிம்கள் திருமணம் செய்ய வேண்டும் என்றால், அரசாங்கத்திடம் சொல்ல வேண்டும். திருமணம் செய்ய அனுமதிக்கப்பட்டால் மணமகனும் மணமகளும் அங்குள்ள காவல் துறைக்கு தெரிவிக்க வேண்டும். தெரிவித்த பின்பு, காவல் துறையினரால் அந்த இருவரும் சோதிக்கப் படுவார்கள். இதில் பரிதாபம் என்னவென்றால், அந்த மணமகள், காவல் துறை அதிகாரிக்கு முன் தன்னுடைய புர்க்காவை அவிழ்த்து உடல் அங்கங்களை அடையாளம் காட்டியாக வேண்டும்.

இரவு நேரங்களில் முஸ்லிம்கள் எங்கும் பயணம் செய்யக்கூடாது. முஸ்லிம்களுக்கு என்று ஒரு எல்லை போடப்பட்டு இருக்கும். அந்த எல்லையோடே அவர்கள் இருந்து கொள்ள வேண்டும். நமது ஊரில் *144* தடை என்ற ஊரடங்கு உத்தரவுச் சட்டம் போடப்படும். அந்தச் சட்டம் சில கலவரங்களில் மட்டும்தான் போடப்படும். ஆனால் ரோஹிங்ய முஸ்லிம்கள் வாழ்கின்ற இடத்தில் எல்லாக் காலங்களிலும் *144* தடை உத்தரவு போடப்பட்டே இருக்கும்.

ரோஹிங்ய முஸ்லிகளின் சொந்த பந்தங்கள், காவல் துறையின் அனுமதி இல்லாமல் ஊருக்குள் வரமுடியாது. அப்படி அனுமதி பெற்று உள்ளே வந்துவிட்டால் இரவு தங்க முடியாது. இரவு தங்குவதற்கும் அனுமதி தரமாட்டார்கள். எந்த பணிச்சுமையையும் அதாவது, பாலம் கட்டுவது, அரசாங்க கட்டிடங்கள் கட்டுவது போன்ற கடின வேலைகளைச் செய்வதற்கு ரோஹிங்ய முஸ்லிம்களே வற்புறுத்தப்பட்டார்கள். சம்பளம் நிர்ணயிக்கப்படாத கொத்தடிமைகளாக வேலைப் பார்க்க வேண்டும். கல்வி பயிலவோ, இதர வேலைகளுக்காகவோ அவர்கள் வெளியூர் செல்லக் கூடாது. காவல் துறையினர் தாங்கள் விரும்பிய நேரத்தில் எப்போது வேண்டுமானாலும் எந்தவித உணவையும் இந்த ரோஹிங்கிய முஸ்லிம்களிடத்திலிருந்து பறித்துக் கொள்ளலாம். காவல் துறைக்கு மதிய உணவு தேவை என்றால் அறிவிப்பே செய்யாமல் ஒரு முஸ்லிமின் வீட்டில் உள்ள உணவை எடுத்துக் கொள்வார்கள். எதை வேண்டுமானாலும் செய்யலாம் இப்படித்தான் ரோஹிங்ய முஸ்லிம்கள் காலங்காலமாக இவ்வளவு இன்னல்களைச் சகித்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள்.

### வரலாறு முழுதும் தொடர்ந்த சோதனை?

வரலாறு நெடுக நாம் பார்த்தால், *1938, 1942, 1962, 1978, 1991.* ஆகிய வருடங்களில் வரலாறு காணாத பாதிப்புகள் இந்தச் சமுதாயத்திற்கு தரப்பட்டுள்ளன. எல்லாக் காலமும் எல்லாச் சூழ்நிலையிலும் பதட்டமான நிலையிலேயே முஸ்லிம்கள் இருப்பார்கள். எந்த நேரத்தில் எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்று அவர்களுக்கு இயற்கையிலேயே உணர்த்தப்பட்ட ஒரு பாடமாக இருந்தது. இந்த ஐந்து ஆண்டுகளில் அவர்கள் மீது தொடுக்கப்பட்டத் தாகுதல்களில் ஆயிரக்கணக்கில், லட்சக் கணக்கில் கொல்லப்பட்டுள்ளார்கள். கடல் பிரேதசத்தில் என்ன செய்வதென்றே தெரியாமல், அண்டை நாடுகளில் தஞ்சம் அடையலாம் என்று தவித்துக் கொண்டும் நிராகரிக்கப்பட்டும் வந்தார்கள். அகதிகளாக தப்பித்துப் போகிற வழியில் ஹெலிகாப்டர்களில் எறியும் எரிகுண்டுகளுக்கு இறையாக இறந்தும் போகிறார்கள்.

இப்படியானச் சூழ்நிலையில்தான் அங்கே ஒரு ஜனநாயக ஆட்சி வருகின்றது. சர்வதேச நீதியின் அடிப்படையில், புதிதாகப் பொறுப்பேற்ற ஜனநாயக ஆட்சியில் முஸ்லிம்களுக்கு அடையாள அட்டை தரப்போவதாக அறிவித்திருந்தார்கள். அடையாள அட்டை தந்த பொழுதுதான், இவ்வளவு காலமாக தொடர்ந்து கொண்டிருந்த கொடுமைகளெல்லாம் இன்னும் கொடூரமாக சூடுபிடிக்க ஆரம்பிக்கின்றது.

இந்த முஸ்லிகள் சிறுபான்மையாக இருக்கும் வரைதான் நமக்குச் சேவை செய்யக் கூடியவர்களாகவும், நம்மிடத்தில் தேவை உடையவர்களாகவும், அமைதி மனம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். இவர்களுக்கு சலுகைகளும் உரிமைகளும் தந்து விட்டால், இவர்கள் இந்தச் சமுதாயத்தில் மதிக்கப்படுகின்ற சூழ்நிலைக்கு வந்துவிடுவார்கள். நம்மையே வீழ்த்துவதற்கு வளர்ந்து விடுவார்கள். இந்த முஸ்லிகளுடைய எண்ணிக்கை வளரவே கூடாது. இந்த முஸ்லிம்கள் எந்தச் சூழ்நிலையிலும் நமக்கு அடிமைகளாகவே இருக்க வேண்டும் என்ற பாடம், பௌத்த குடும்பத்தில் பிறந்திருக்கின்ற சிறுபிள்ளைகளுக்கும் சொல்லித் தரப்படும்.

அடையாள அட்டை தரப்போகின்ற ஒரு அறிவிப்பைத்தான் அந்த அரசாங்கம் செய்தது. அதுவும் அவர்கள் தாங்களாகவே முன்வந்து, மனமுவந்து செய்யவில்லை. ஏனைய நாடுகளின் எதிர்ப்புகள், பல்வேறு விதமான கேள்விகள், உலக அரங்கில் இந்த அரசாங்கத்தின் மீது அவப்பெயர் ஏற்பட்டுவிடும். போன்ற விஷயங்களை எல்லாம் கணக்கில் கொண்டு, நிர்ப்பந்தத்தின் அடிப்படையில், விருப்பமில்லாமல் அடையாள அட்டையை வழங்கப் போகிறோம் என்று ஆட்சியாளர்கள் அறிவித்தார்கள். அதற்குப் பிறகு, ரோஹிங்ய முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல்களை நாம் வாட்ஸ்அப், முகநூல் போன்ற சமூக வலைத் தளங்களின் வாயிலாக பார்த்து வருகிறோம்.

இஸ்லாமிய அழைப்பாளர்களாக இருந்த பத்து நபர்களை கொடுமைப்படுத்தி இருக்கிறார்கள். யாருக்கும் இஸ்லாமிய பிரச்சாரம் செய்யக் கூடிய துணிவு வரக்கூடாது. இஸ்லாமியர்களுக்கு ஆதரவாகவும் யாரும் இருக்கக் கூடாது என்கிற மனநிலையை அனைவரிடமும் விதைப்பதற்கு, மூக்குகள் துண்டிக்கப்பட்ட, நாக்குகள் துண்டிக்கப்பட்ட, தலையின் மூளைகள் பிதுங்கித் தொங்கக் கூடிய, குழந்தைகள் கொல்லப்படக் கூடிய இன்னும் இதுபோன்ற பல கொடூரச் சம்பவங்களை புகைப்படமாக எடுத்து இவர்களே சமூக வலைத்தளங்களில் வெளியிடுகின்ற தைரியச் செயல்களையும் நம்மால் பார்க்க முடிகிறது.

இரக்க குணமற்ற இந்த கயவர்கள், ஒரு கலவரத்தில், ஒரே நேரத்தில் ஏழு கிராமங்களை உயிரோடு எரித்திருக்கிறார்கள். இப்படிக் கணக்கிட்டுப் பார்த்தால், இதுவரை எட்டு லட்சம் முதல் பத்து லட்சம் முஸ்லிம்கள் வரை, இதுவரைக்கும் கொல்லப்பட்டு இருக்கிறார்கள்.

**ஏழு குழந்தைகளுக்குத் தாயான ஒரு பெண் கதறி அழுது பேட்டி கொடுக்கிறாள். "நான் எத்தனை முறை கற்பழிக்கப்பட்டேன் என்று எனக்கே தெரியாது!" என்று!**

மேல்குறிப்பிட்ட இத்தனைக் கொடுமைகளும் இவ்வளவு காலங்களாக தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றை நாம் வெறுமனே ஏதோ சாதாரணமான நிகழ்வாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அவர்களுக்காக வேண்டி நாம் உணர்வுபூர்வமான பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும். அங்கே சிரமத்தில் வாடுபவர்கள் நமது சகோதரர்கள், நமது சகோதரிகள், நமது தாய்மார்கள் என்ற உணர்வு நம்மிடத்தில் ஆட்கொள்ள வேண்டும்.

இறைவா, நீ அந்த காட்டுமிராண்டிகளுக்கு நேர் வழியைத் தா... அல்லது அவர்களை உன் பிடியால் அழித்து விடுவாயாக... என்ற பிரார்த்தனையை மேற்கொள்வோம். இங்கிருந்து அவர்களுக்கு நம்மால் ஆன உதவிகளைச் செய்ய முனைவோம்.

இந்த உலகம் காஃபிர்களுக்கு சொர்க்கம் எனவும், முஸ்லிம்களுக்கு சிறைச்சாலை எனவும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்ன வாக்கை நினைவு படுத்தி, அந்தப் பொதுவிதியை நாம் புரிந்து கொள்வோம்.

*(A.* **அன்ஸார் ஹுசைன் ஃபிர்தவ்ஸி** *அவர்கள் புதுப்பேட்டை "மஸ்ஜிதுஸ் ஸலாம்" பள்ளியில் ஆற்றிய வெள்ளி உரையிலிருந்து சுருக்கமாக...)*

**எழுத்தாக்கம்: M. இப்ராஹிம், தாங்கல்.**




**ONLINE FREE UNANI HERBAL CONSULTATION**

**044-2848 1344** * Email: drsyedmmameen@gmail.com

for * Sinusitis * Joints Pain * Infertility
* Nervous Debility * Obesity * Beauty & Hair Care

**in public interest by Dr. Hakim Syed M.M.Ameen**
**S.K's Herbal Medical Hospital & Research Centre**
36, J.J.K. Road, Royapettah, Chennai - 600 014. India.

# இறைவனிடம் கையேந்துங்கள்!

**முஹம்மத் யஹ்யா பாஷா**



“ஆடு தன் குட்டியை ஈன்றெடுக்கும் பொழுது, வலியை பொறுத்துக் கொள்ளும் குணமும், பொறுமையும் தேவைப்படுகிறது.”

“ஒரு தாய் தன் பிள்ளைகளை ஈன்றெடுக்க, அவளுக்கு பக்குவமும், வலிகளைத் தாங்கக் கூடிய மன தைரியமும் தேவைப்படுகிறது.”

“காக்கைச் சிறகுகள் தன் குஞ்சினை பெறவும், அதன் முட்டைகளை தவமாக இருந்து காக்கவும் அதற்கு நிதானமும், கவனமும் தேவைப்படுகிறது.”

மேற்சென்ற உதாரணங்களிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் படிப்பினை பொறுமையும் மன தைரியமும் தான்!

“சிப்பிக்குள் இருக்கும் முத்துகள் வெளிவந்த பிறகே, அதனுடைய மதிப்பு இன்னும் அதிகமாவதைப் போல நாம் கடைப்பிடித்து வரும் பொறுமையும், நிதானமான நிலையும் நம்மைப் பக்குவப்படுத்தி நம்மை மதிப்பு மிக்கவராக உருமாற்றுகிறது.

அதையே இறைவன் தன் திருமறையில் இவ்வாறு உணர்த்துகின்றான்.

“நம்பிக்கை கொண்டோரே! பொறுமையுடனும், தொழுகையுடனும் (இறைவனிடம்) உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்.” (அல்குர்ஆன் 2:153)

மனிதனுக்கு இறைவன் வழங்கிய மகத்துவங்களில் ஒன்று துஆ (பிரார்த்தனை) ஆகும். அதை நாம் அதிகமாக இறைவனிடத்தில் கேட்க வேண்டும். அதில் பொறுமையையும் கடைப்பிடிக்க வேண்டுமென இறைவன் நம்மிடத்தில் கூறுவதன் மூலம் நம்மை பொறுமைமிக்க மனிதராக மாற்றி விடுகிறான்.

இறைவன் தன்னுடைய வேதமான திருக்குர்ஆனில், இறைத்தூதரின் வரலாறுகளைச் சொல்லுவதன் மூலம் நமக்கு பல விஷயங்களை கூறுகின்றான்.

நாமெல்லாம் அறிந்தவரும், இறைத்தூதர்களுக்கு எல்லாம் முன்னோடியுமான, இறைவனின் நண்பன் என்று போற்றப்பட்ட நபி இப்ராஹீம்(அலை) அவர்களுடைய வாழ்விலிருந்து பெரும் படிப்பினைகளை நம்மால் அறிந்து கொள்ள முடியும்.

அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது தன் தந்தையை விட்டு தனித்து விடப்பட்டச் சூழல், இப்ராஹீம்(அலை) இறைக் கொள்கையை மக்களுக்கு எடுத்துக் கூறும்போது அதை முடக்குவதற்காக கொடுங்கோல் ஆட்சியாளனின் மூலம் நெருப்புக் குண்டத்தில் தூக்கி எறியப்பட்ட சூழல், தான் தவமாக இருந்து பெற்றெடுத்த மகனை இறைவனுக்காக பலிக் கொடுக்கத் துணிந்த சூழல் என அவருடைய தியாகத்தின் உன்னதங்களை வெறும் வார்த்தைகளால் சொல்லிவிட்டு செல்லக் கூடியது அல்ல.

இப்ராஹீம்(அலை) அவர்கள் கொண்டிருந்த இறையச்சத்தின் நிலையும், அவர் கொண்டிருந்த பொறுமையும், அவர் இறைவனின் மீது வைத்திருந்த இறைப்பற்றும் நம் உடலை ஒவ்வொரு முறையும் சிலிர்க்கச் செய்கின்றன. நம் உள்ளத்தை (இறையச்சத்தை) புதுப்பிக்கச் செய்கின்றன.

அடுத்ததாக, நபித்தோழர் பிலால்(ரலி) அவர்கள் வாழ்வில் இருந்தும் சில படிப்பினைகளை நம்மால் பெற முடிகிறது.

கறுப்பின மக்கள் வாழக்கூடிய பகுதியில் பிறந்து, அடிமையாக வாழ்ந்து வந்தவர் நபித்தோழர் பிலால் (ரலி) அவர்கள்.

இஸ்லாம் பரவிக் கொண்டிருந்த காலச் சூழ்நிலையில் கறுப்பினத்தவர்கள் அனைவரும் மக்களிடையே அடிமைகளாகவே பார்க்கப் பட்டார்கள். அவர்களை பணத்திற்காக அடிமையாக விற்று வந்தார்கள். அப்படிப்பட்டச் சூழ்நிலையில் இஸ்லாத்தை ஏற்ற அவரைப் பாதுகாப்பதற்காக அபூபக்கர் சித்திக்(ரலி) அவர்கள் பிலால்(ரலி) அவர்களை விலை கொடுத்து வாங்கினார்கள்.

பிலால் (ரலி) அவர்களிடம் இஸ்லாத்தை பற்றியும் இறைமறைக் கொள்கையை பற்றியும் எடுத்துக் கூறியவுடன் இஸ்லாத்தை அவர் தழுவுகிறார். அவர் இஸ்லாத்தை ஏற்ற பின்பு அவரைச் சுதந்திரமாக விட்டுவிடவில்லை. அவர் உன்னதமாக ஏற்றுக் கொண்ட இறைக் கொள்கையை விட்டு விடும் படி இறை மறுப்பாளர்களில் பலர், மன்னரின் ஆதரவில் அவர்களை பாலைவன மணலில் படுக்கச் செய்து வயிற்றில் கடும் சூடான பெரும் பாறைகளை வைத்து அவரை இறைமறுப்புக் கொள்கையை பின்பற்றுமாறு வற்புறுத்தினார்கள். பல சித்ரவதைக்கு ஆளாக்கினார்கள். அவர் அஹத்... அஹத்... (இறைவன் ஒருவனே) என்ற ஒற்றை முழக்கத்தை மட்டுமே சொல்லிக் கொண்டிருந்தார்.

மேற்சென்ற இரண்டு வரலாற்றுப் படிப்பினைகள் மட்டுமல்ல! இதுபோன்ற பல வரலாறுகளை எல்லாம் இஸ்லாத்திலிருந்து நாம் பெற்றுக் கொள்வது எதற்காக என்று நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மேலும், இறைவன் கூறியதைப் போன்று எந்தச் சூழ்நிலையிலும் பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் உதவி தேட வேண்டும். என்பதே இத்தகைய வரலாறுகளிலிருந்து நாம் பெற்றுக் கொள்ளக்கூடிய படிப்பினை ஆகும்.

எந்தச் சூழ்நிலையிலும், எப்படிப்பட்டச் சிரமங்களிலும் நம்முடைய இறையச்சமும், நம்முடைய இறைநம்பிக்கையும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதனை இதுபோன்ற படிப்பினைகள் நமக்கு உணர்த்திக் கொண்டே இருக்கின்றன. ஆக, இறைவன் கூறுகின்ற படி பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் இறைவனிடத்தில் கையேந்த வேண்டும்.

இறைவன் கூறுகின்ற சொல்லின் படி நம் செயல்கள் அமைய வல்ல இறைவன் அருள் புரிவானாக...

“இறைவனிடம் கையேந்துவோம்!”

---



# சமத்துவ மார்க்கம் இஸ்லாம்

**வி.எஸ். முஹம்மது முஸம்மில் அல்புகாரி**

தேடலுக்கான காத்திருப்பு. அவர்களின் ஒன்றுகூடலுக்கான நோக்கம் நபி (ஸல்) அவர்களின் வருகைக்காக! நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களுக்கு உபதேசம் செய்வதற்கு அவர்களின் சந்தேகங்களை விளக்குவதற்கு, அவர்களின் பிரச்னைகளுக்குத் தீர்ப்பு வழங்குவதற்காக ஒரு நேரத்தை ஒதுக்குவார்கள். அந்நேரத்தில்தான் அவர்கள் குழுமியிருந்தார்கள், அங்கே சிலர் குழுமியிருந்தார்கள். மாபெரும் எதிர்பார்ப்பு கலந்த ஆர்வத்துடன் அவர்கள் எதிர்நோக்கியிருந்தனர். அது அருள் நிறைத்த வார்த்தைகளுக்கான எதிர்பார்ப்பு. சத்தியத்

உள்ளவர் என்பதால் சரியாக வார்த்தைகளை உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தால் அவர் எப்போதும் நபி(ஸல்) அவர்களின் அருகாமையில் தன் இருப்பிடத்தை அமைத்துக் கொள்வார். அவர்களில் ஸாபித் இப்னு கைஸ் (ரலி) என்ற நபித்தோழர் மிகவும் ஆர்வமாக இருப்பவர். காது கேட்பதில் கொஞ்சம் குறைபாடு

ஒருநாள் ஸாபித் இப்னு கைஸ் (ரலி) அவர்கள் அந்த அவைக்கு தாமதமாக வருகிறார். ஏனைய நபித் தோழர்கள் வழக்கம் போல் பெருமானார் (ஸல்) அவர்களின் சபையில் அமர்ந்திருந்தார்கள். அவசர அவசரமாக வந்த அவர் நபி (ஸல்) அவர்களின் உதட்டிலிருந்து உதிக்கும் வார்த்தைகளைச் சரியாக விளங்கிக்கொள்ள வேண்டுமே என்ற ஆர்வ மேலிட்டால் எனக்கு என் இருப்பிடம் செல்ல வழி விடுங்கள் என அமர்ந்திருந்தவர்களிடம் வேண்டினார். அவர்களோ சபைக்கு இடையூறு வரும் என்பதால் அவரை அங்கேயே அமரச் செய்கின்றார்கள்.


சுட்டிக்காட்டி வசை மொழிந்தார். அவரோ பதிலேதும் பேசாமல் வெட்கத்தில் கூனிக் குறுகினார். சபையில் ஓரமாக அமர்ந்திருந்த ஸாபித் இப்னு கைஸ் (ரலி) அவர்கள் பெருமானார் அவர்களின் கூற்றை சரியாக விளங்கிக் கொள்ள முடியவில்லையே என்ற இயலாமையினால் தவித்தார். அவருள் கோபம் ஊற்றெடுத்தது. அதன் வெளிப்பாடாய் அவர் எப்போதும் அமரும் இடத்தில் இருந்தவர் மீது அனலாய் வார்த்தைகளை அள்ளித் தெளித்தார். அவரது கோத்திரத்தை (இஸ்லாத்தில் அவர் இணைவதற்கு முந்தைய) அறியாமைக் காலத்தில் அவர்கள் பயன் படுத்திய வார்த்தைகளை அவர் ஆதங்கத்தின் காரணமாகச் சொல்லி விட்டார். அங்கே அமர்ந்திருந்து வசை கேட்டவர் மனசங்கடம் அடைந்து வருந்துகிறார். சாதிய ஏற்றத்தாழ்வுகள், இனத்தால், பிறப்பால் வேற்றுமை காணும் அவலம் துளியும் இல்லாத இஸ்லாத்தில், இது போன்ற ஒரு அவ நிகழ்வு நடந்ததும்தான் தாமதம் அல்லாஹ் தனது நபியின் மீது வசனத்தை இறக்குகின்றான்,

“முஃமின்களே! ஒரு சமூகத்தார் பிரிதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். ஏனெனில் (பரிகாசிக்கப்படுவோர்), அவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம்; (அவ்வாறே) எந்தப் பெண்களும், மற்றெந்தப் பெண்களையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்) ஏனெனில் இவர்கள் அவர்களை விட மேலானவர்களாக இருக்கலாம்; இன்னும் உங்களில் ஒருவருக்கொருவர் பழித்துக் கொள்ளாதீர்கள், இன்னும் உங்களில் ஒருவரை யொருவர் (தீய) பட்டப்பெயர்களால் அழைக்காதீர்கள்; ஈமான் கொண்டபின் (அவ்வாறு தீய) பட்டப் பெயர் சூட்டுவது மிகக் கெட்டதாகும்; எவர்கள் (இவற்றிலிருந்து) மீளவில்லையோ, அத்தகையவர்கள் அநியாயக்காரர்கள் ஆவார்கள். (அல்குர்ஆன் 49:11)

இஸ்லாம் சமத்துவ மார்க்கம். இது ஏற்றத் தாழ்வுகளற்றது. இன வேறுபாடுகளை 1438 ஆண்டுகளுக்கு முன்னரே இஸ்லாம் வேரறுத்து யாவரும் ஒரு குலத்து மக்கள் என்ற சமத்துவத்தை உலகுக்கு உணர்த்தியது.

தலையங்கம்

# புளூவேல் விளையாட்டு விழிப்பு உணர்வு வேண்டும்!



மனித மூளையை மழுங்கடிக்கச் செய்யும் கார்ட்டூன் படங்கள், தொடர்கள், ஒளிப்பேழைகள், விளையாட்டுகள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டதே, வளரும் பருவத்தினரிடையே ஒரு விதமான உளவியல் மாற்றத்தை ஏற்படுத்தி கையாளாகத் தன்மையை கட்டமைக்கத்தான். யூதர்களின் உருவாக்கம் என்று அறியப்படுகின்ற இந்த கார்ட்டூன்கள், அவர்களின் நாட்டில் காண்பதற்கோ, அறிமுகப்படுத்துவதற்கோ தடை!

குழந்தைப் பருவத்திலிருந்தே தொடங்கி, வீட்டில் அடைபட்டு, மனித உருவங்களின் நிழல் கதாபாத்திரங்களை கேலிச்சித்திரமாக மனதில் ஏற்றுமதி செய்யப்படுவதால், மனவலிமை, தைரியம், போராடும் குணம், பிரச்னைகளை எதிர்கொள்ளும் மனப்பக்குவம் போன்றவை அதிவேகமாகக் குன்றிப்போகிறது. உடலையும் உயிரையும் விடுத்து விட்டு, மனதையும் சிந்தனையையும் முதிர்வுப் போக்குக்கு வளர விடாமையே கார்ட்டூன்கள் மற்றும் கைப்பேசி கேம்களின் முக்கிய நோக்கமாகும். சமீப காலமாக உலக நாடுகளை காவு வாங்கி வந்த புளூவேல் என்கிற “நீலத்தமிங்கலம் சவால்” விளையாட்டு இந்தியாவில் சாத்தியமில்லை என்ற வாதத்தை அடித்து நொறுக்கி இருக்கிறது.

மென்பொருளாக இதை வடிவமைக்காமல், இணையதள விளையாட்டாக உருவாக்கி, ஒரு குறிப்பிட்ட வயதைச் சார்ந்த சிறுவர்களைத் தேர்ந்தெடுத்து, தங்கள் வலையில் விழவைத்து, ஐம்பது கட்டங்களை கடக்க வேண்டும் என்ற சவாலைத் தந்து, அவையனைத்தையும் ஆபத்தானவையாகயும் கொடூரமானவையாகவும் அமைத்து, பிஞ்சு மனங்களை உளவியல் ரீதியாக பல மாறுதல்களுக்கும் அச்சுறுத்துல்களுக்கும் உள்ளாக்கி, இறுதி ஐம்பதாவது கட்டத்தில் உயிரை மாய்க்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்குத் தள்ளுகிறது.

ரஷ்யாவைச் சேர்ந்த ”பிலிப் புடேய்கின்” என்பவனே புளூவேல் விளையாட்டை நிறுவியவன் ஆவான். மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனையில் இருக்கும் இவன் கூறும்போது, “எனக்கு எந்த வருத்தமும் இல்லை! இறந்துபோன குழந்தைகள் மகிழ்ச்சியாகவே மரணித்தார்கள். எந்த இலக்கும் இல்லாமல், பொழுது போகவேண்டும் என்று இணையதளத்தில் உலா வந்து, என் விளையாட்டிற்கு இரையாகும் இவர்களைப் போன்றோர் ஏன் வாழ வேண்டும்? இவர்கள் பூமிக்கு பெரும் பாரமானவர்கள்! ஆதலால்தான் நான் வருத்தப்படவில்லை” என்கிற அதிர்ச்சியூட்டும் வாக்குமூலத்தைத் தந்தான்!

இவ்விளையாட்டால் உலக அளவில், சற்றேறக்குறைய 150 பிள்ளைகள் மாண்டிருக்கிறார்கள். இந்தியாவிற்கு இவ்விளையாட்டுச் சாத்தியமில்லை என்ற கருத்து எழுந்த சில நாள்களிலேயே மும்பையைச் சேர்ந்த 14 வயது பள்ளி மாணவர் “மன்ப்ரீத்” தற்கொலைக்கு ஆளானார். அடுத்து தமிழகத்தில் மதுரையைச் சேர்ந்த “விக்னேஷ்” என்பவர் புளூவேலுக்குப் பலியானார். வாணியம்பாடியில் உள்ள ஒரு பள்ளியில் படிக்கும் மாணவரையும், கொல்கத்தாவில் உள்ள கல்லூரி மாணவர் ஒருவரையும் புளூவேல் விட்டு வைக்கவில்லை. முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டதால் உயிரிழப்பு இல்லாமல் தடுக்கப்பட்டது.

“முதுகுத் தண்டில் தொடர்ச்சியான வலி, தூக்கம் பாதித்தல், ஒற்றைத் தலைவலி, உணவு முறையில் முறையின்மை, குடும்பத்தாரிடம் அக்கறையின்மை, தனி மனித ஒழுக்கத்தில் பாதிப்பு, பொது இடங்களுக்கு வருவதைத் தவிர்த்தல், மணிக்கட்டு பகுதி நரம்பும் எலும்பும் பாதிப்படைதல், வன்முறை குணம் ஓங்குதல், சுகாதாரமின்மை, அடிக்கடி மனநிலை மாற்றம், கோபப்படுதல், எப்போதும் தனித்திருத்தல்” ஆகிய பாதிப்புகள் புளூவேல் விளையாட்டால் ஏற்படுபவை. இவற்றில் ஏதேனும் ஒன்றை பிள்ளைகளிடத்தில் கண்டாலும் விழிப்பு உணர்வு அவசியம்.

பொருளாதாரத்தின் மீதான பேராசை, சமூகத்தில் தங்களை உயர்ந்தவர்களாக காட்ட வேண்டிய ஒருவித மோக நிலை, நவீன தொழில் நுட்பங்கள் தரும் மாயை இவைகள்தான் இன்று நகரமயமாதலுக்கு நகர்ந்து கொண்டிருக்கும் பெற்றோர்களின் அலட்சியப் போக்குக்கும் அசாதாரண வளர்ப்புக்கும் பெரும் காரணங்களாக உள்ளன.

சிறந்த இலக்கை நோக்கி நகர்த்த வேண்டிய பிள்ளைகளை நவீன யுகத்தின் நோய்த்தன்மையை கையில் கொடுத்து பாழாக்குவது பெருங்குற்றம். பெற்றோர்களின், ஆசிரியர்களின் கண்காப்புக்குக் கீழ் பிள்ளைகள் எப்போதும் இருக்க வேண்டும். நல்ல புத்தகங்கள், விளையாட்டுகள், செய்முறைப் பயிற்சிகள் போன்றவற்றை பிள்ளைகளிடத்தில் அறிமுகப் படுத்த வேண்டும். வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர வைத்து, அதன் மீதான ஆர்வத்தை அதிகப்படுத்த வேண்டும். செழிப்பான வாழ்க்கையை தவறவிட்டு வளரும் குழந்தைகளை மீட்டெடுக்க வேண்டும்.

வேதவரிகள்

## மனிதனை வழிகெடுக்கும் மிகப்பெரிய சக்தி!

மலக்குகளை நோக்கி, “ஆதமுக்கு சிரம் பணியுங்கள்” என நாம் கூறிய சமயத்தில் இப்லீஸைத் தவிர (மலக்குகள் அனைவரும் அவருக்குச்) சிரம் பணிந்தார்கள். அவனோ “நீ மண்ணால் படைத்தவனுக்கு நான் சிரம் பணிவதா?” என்று கேட்டான். (பின்னும் இறைவனை நோக்கி) “என்னைவிட நீ கௌரவப்படுத்தி இருப்பவர் இவரல்லவா என்பதை நீ கவனித்தாயா?” (என்று ஆதமைச் சுட்டிக் காண்பித்து) “நீ என்னை மறுமை நாள் வரையில் பிற்படுத்தி வைத்தால் வெகு சிலரைத் தவிர இவருடைய சந்ததிகள் அனைவரையும் நான் வழிகெடுத்து (வேரறுத்து) விடுவேன்” என்று கூறினான். (அதற்கு இறைவன், இங்கிருந்து) “நீ அப்புறப்பட்டுவிடு. அவருடைய சந்ததிகளில் உன்னைப் பின்பற்றியவர்களுக்கும் (உனக்கும்) முற்றிலும் தகுதியான கூலி நிச்சயமாக நரகம்தான்” என்றும், (அன்றி) “நீ உனக்குச் சாத்தியமான அளவு கூச்சல் போட்டு அவர்களைத் தூண்டிவிடு. உன்னுடைய குதிரைப் படைகளையும், காலாட்படைகளையும் அவர்கள் மீது ஏவிவிடு. அவர்களுடைய பொருளிலும் சந்ததியிலும் நீ கூட்டாக இருந்துகொண்டு அவர்களுக்கு (நயத்தையும் பயத்தையும் காட்டி) வாக்களி” என்றும் கூறினான். ஆகவே, (ஷைத்தான் (ஆகிய நீ) அவர்களுக்கு வாக்களிப்பதெல்லாம் ஏமாற்றமே அன்றி வேறில்லை. நிச்சயமாக எனது (மனத்தூய்மையுடைய) அடியார்கள் மீது உனக்கு எவ்வித அதிகாரமும் இல்லை.” (என்றும் கூறினான். (ஆகவே, அவர்களை) பொறுப்பேற்றுக் கொள்ள உங்கள் இறைவ(னாகிய நா)னே போதுமானவன்.

(அல்குர்ஆன் 17:61–65)

மனிதனை வழிகெடுக்கின்ற ஒரு சக்தியாக இறைவன் ஷைத்தானை ஆக்கியிருக்கின்றான். ஷைத்தான் என்கிற தீய சக்தியை எதிர்த்துப் போராடுகின்ற ஒரு களம்தான் இந்த பூமி. இந்தப் போராட்டக் களத்தில் வெற்றிபெறுபவர்கள் யார்? தோல்வியடைபவர்கள் யார்? என்பதை பரிசோதிக்கும் சோதனைக் கூடமாகவே இந்த வாழ்க்கை அமைந்திருக்கிறது. இறைவனின் மார்க்கத்தில் நிலைத்து நிற்பவர்கள் ஷைத்தானின் சூழ்ச்சிப் பிடியிலிருந்து தப்பித்து விடுகின்றனர்.

எனவே, ஷைத்தானின் இலட்சியமே மனிதர்களை வழிகெடுப்பதுதான் என்பதை மேற்கண்ட இறை வசனத்திலிருந்து அறிய முடிகிறது. ஷைத்தானின் வலைகள் எந்த புறத்திலிருந்து வந்தாலும் அதில் சிக்கிவிடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதற்காக இறைவனிடம் பிரார்த்திப்பதையும், இறைமார்க்கத்தின் பக்கம் நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதையும் நாம் கடமையாக்கிக் கொள்ள வேண்டும்.

தூதர் மொழிகள்

## விதவைக்கு உதவுவீர்!

ஸஃப்வான் இப்னு சுலைம்(ரலி) அறிவிக்கின்றார்கள்: கணவனை இழந்த விதவைக்காகவும், ஏழைக்காகவும் பாடுபடக் கூடியவர்; இறைவழியில் அறப்போர் புரிபவர் அல்லது பகலில் நோன்பிருந்து இரவில் வணக்கத்தில் ஈடுபடுபவர் போலாவார் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(நூல்கள்: புகாரி6006, முஸ்லிம்5295, திர்மிதி1892, நஸயீ2530, இப்னுமாஜா2131, அஹ்மத்8377)

“சுயநலம்” மிகுந்த காலம் இது. சுயநலம் பேணாத மனிதர் எவரும் இருக்க முடியாது. என் குடும்பத்தின் நலனுக்காக என்னால் முயற்சி செய்ய இயலவில்லை. இந்த நிலையில் மற்றவருக்குப் பாடுபடுவதா? என்று கேட்கும் நிலைதான் சமூகத்தில் பரவலாக உள்ளது.

ஆனால், ஒரு இறைநம்பிக்கையாளன் இறைவனின் அன்பை பெறுவதற்காக “இரவு முழுவதும் வணங்கு” என்று கூறினால் வணங்கத் தயாராக இருப்பான். இதுபோல் “பகல் முழுவதும் நோன்பு இரு” என்று கூறினால் இறைவனுக்காக, இறைவனின் அன்பைப் பெறுவதற்காக நோன்பு வைக்கத் தயாராவான். தேவைப்பட்டால் தன் உயிரையும் தருவதற்கு தயாராவான். இதுவெல்லாம் செய்வது இறைவனின் அன்பைப் பெற வேண்டும் என்பதற்காக அன்றி வேறெதற்கும் இல்லை.

இறையன்பைப் பெற பெரிய முயற்சி எதுவும் தேவையில்லை. “கணவனை இழந்து நிற்கும் கைம்பெண் ஒருத்திக்கு அவள் பணத் தேவைக்குரியவளாக நிற்கும்போது உதவு! அவளின் மறுமண வாழ்க்கைக்கு ஒத்துழைப்பு நல்கு! அவளின் கஷ்டத்தின்போது அதைப் போக்கிட உதவி செய்!” என்று நபி(ஸல்) அவர்கள் போதிக்கின்றார்கள்.

# வாசகர் கருத்து!



சென்ற இதழில் இடம்பெற்ற “இஸ்லாமும் மருத்துவமும்2” என்ற கட்டுரை நன்று. இருப்பினும் நபி(ஸல்) அவர்கள் வெங்காயமும் பூண்டும் சாப்பிட்டு விட்டு பள்ளிவாசலின் பக்கம் வர வேண்டாம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். கட்டுரையாளர், நபி(ஸல்) அவர்கள் “கடிந்து கொண்டிருக்கிறார்” என்ற வார்த்தையை உபயோகித்து இருக்கிறார். கடிந்து கொள்வது என்பது கோவித்துக் கொள்வது, வெறுப்பது போன்ற அர்த்தத்தை தரும். நபிமொழியில் இவ்வாறான அறிவிப்பு இல்லை என்பதை தெளிவுபடுத்துகிறேன்.

**முஹம்மத் உசேன், திருவொற்றியூர்**

“அழைப்பொலி” இதழில் வரும் அனைத்து ஆக்கங்களும் அருமையாக உள்ளன. ஆனால், திருமணமாகாத, திருமணமான இல்லத்தரசிகளுக்கு என ஒரு பகுதி ஒதுக்கப்பட்டால் இன்னும் நன்றாக இருக்கும்.

**ஷீரின் முஜீப், தாங்கல்**

உங்கள் வாழ்க்கையின் நோக்கம் என்ன என்ற கட்டுரை சிந்தனையைத் தூண்டியது. மரணத்தைக் குறித்த அச்சத்தை வெளிப்படுத்தியது. வாழ்க்கையை குறித்த புரிதலை ஏற்படுத்தியது. பக்ரீத் பெருநாள் அன்று பள்ளிவாசல் பாதுகாப்புக்கு வந்த காவல்துறை நண்பர்களும் அழைப்பொலியை வாங்கி ஆர்வத்தோடு வாசித்தது வியப்பைத் தந்தது. அழைப்பொலியின் முயற்சி மேலும் விரிவடையட்டும்.

**இப்ராஹீம், செரியன் நகர்**

சையத் அலீ ஃபைஸி அவர்கள் எழுதியிருந்த நாங்களும் முஸ்லிம்கள் தான் என்ற ஆக்கம் படிப்பதற்கு ஆர்வமாகவும் வித்தியாசமாகவும் இருந்தது.

**ஹசன் அலீ, திருவொற்றியூர்**

நூஹ் மஹ்ழரியின் நல்லவராக இருத்தல் வேறு! சீர்திருத்தம் வேறு! என்ற இணையதள பதிவு, எங்கள் பகுதியிலுள்ள நண்பர்களிடத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதுபோன்ற பதிவுகளை அடையாளப்படுத்துகின்ற அழைப்பொலிக்கு வாழ்த்துகள்.

**புர்ஹான் ஷா, ரெட்ஹில்ஸ்**


கௌரவ ஆலோசகர்கள் &
இதழ் மேற்பார்வை
M. பஷீர் ஃபிர்தவ்ஸி
முஹம்மது இஸ்மாயீல் காஷிஃபி
அபூமொஹ்சின் | நண்பன் அபூபக்கர்

இதழ் வடிவமைப்பு: “1st Step” இம்ரான்

ஆசிரியர்: மக்தூம் தாஜ்



உங்கள் படைப்புகள் மற்றும் கருத்துகளை அனுப்ப
“அழைப்பொலி” மாத இதழ்
எண்.14 (7-A), பி.பி.டி.ரோடு,
தாங்கல், சென்னை – 600 019.
அலைப்பேசி – வாட்ஸ்அப் : 98849 28787
மின்னஞ்சல்: azhaippoli2017@gmail.com

## "உலகக் கடிகாரத்தைக் கண்டுபிடித்த கடைக்கோடி மனிதர் சையத் ஹஸன்."

உலகமயமாதல், நகரமயமாதல் என்று மனிதர்களின் வாழ்க்கை மாறிக் கொண்டிருக்க, பணம், பதவி, புகழ் என மனிதனின் இலக்குகள் தடம் புரண்டு கொண்டிருக்க உலகத்தையே புரட்டிப் போடும் ஓர் அரிய சாதனையை நிகழ்த்தியிருக்கிறார் ஏழாம் வகுப்பு படித்த எளிய மனிதர்.

சென்னை திருவொற்றியூர், தாங்கல் பகுதியைச் சேர்ந்த இனாமுல் ஹசன் என்கிற சையத் ஹசன் அவர்கள் நிகழ்த்தியிருக்கிற இக்கண்டுபிடிப்புச் சாதனை, வரலாற்றின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மாற்றி அமைக்கக் கூடியதாக உள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் அபிராமத்தைச் சேர்ந்த இவர், சென்னையில் பிறந்து வளர்ந்தார். இவரோடு சேர்த்து மொத்தம் எட்டு பேர். இதில் இவர் ஆறாவது மகன். தற்போது முப்பது மூன்று வயதாகியிருக்கும் சையத் ஹஸன் இந்தக் கடிகாரத்தைக் கண்டுபிடிப்பதற்கு இரண்டு ஆண்டுகளை அர்ப்பணித்துள்ளார். இதுவரை இரண்டு லட்சம் வரைக்கும் செலவும் செய்துள்ளார்.

இரண்டு ஆண்டுகள் ஒதுக்கி, இரண்டு இலட்சம் வரை செலவிட்டு அப்படி என்னதான் கடிகாரத்தைக் கண்டுபிடித்துள்ளார்? என்ற கேள்வி உங்கள் மனதில் எழுவதை உணர முடிகிறது.

நாம் இதுவரை பார்த்து, பயன்படுத்தி வந்த சாதாரண சுவர் கடிகாரம் அல்ல இது. நாம் பயன்படுத்தும் கடிகாரம் மூன்று முள்களை கொண்டிருக்கும். இந்தக் கடிகாரத்திற்கு ஐந்து முள்கள். சாதாரண கடிகாரத்தில் நாம் வாழுகின்ற நாடு, மாநிலம், ஊர் போன்ற இந்த இடங்களில் என்ன நேரம் என்பதை அறியலாம். இருப்பினும், ஒரு நாட்டிலேயே மாநிலத்திற்கு மாநிலம் நிமிட கணக்கில் நேரம் மாறுபடுவதை நம்மால் ஊகிக்க முடியும். இந்தப் புதிய கடிகாரத்தில் உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் உள்ள நேரத்தை எளிதாக பார்க்கலாம். இங்கிருந்து கொண்டே அமெரிக்காவில், ஆப்பரிக்காவில், ஆஸ்திரேலியாவில், ஜப்பானில், சவூதியில் என எல்லா நாடுகளிலும் தற்போது என்ன நேரம் என்பதை கடிகாரத்தைப் பார்த்து அறியலாம்.


ஜி.எம்.டி. (GreenWhich Mean Time) யு.டி.சி. (Co-ordinated Universal Time) நேரங்களையும் காணலாம். மேலும் சூரியனின் சுழற்சி முறை இரவு பகல் நேரங்களை காணும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிகாரத்தில் இரண்டு திசைக் காட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன. 96 ஜி.எம்.டி. எண்களும், 4 நிறங்களிலான கோடுகளும் உள்ளன. இந்தக் கடிகாரத்தின் அறிவுசார் பாதுகாப்பு உரிமைக்காக அரசிடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

அரசின் காப்புரிமைகளுக்கான அலுவலகத்தின் இதழில் இந்தக் கடிகாரம் குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தக் கடிகாரத்துக்கு அரசு அங்கீகாரம் வழங்கும் பட்சத்தில், உலகளவில் இந்தக் கடிகாரத்தை உருவாக்கிய பெருமை இந்தியாவுக்கு கிடைக்கும். வெளிநாடுகளுக்குச் செல்லும் போது கடிகார நேரத்தை மாற்றி வைக்கவேண்டிய தேவை இல்லை.

உலகில் பல விஞ்ஞானிகள் முயன்று தொட முடியாத இந்த உலகக் கடிகார முயற்சியை சையத் ஹஸன் முயன்று வெற்றிபெற்றுள்ளார்.

எப்படி இந்த முயற்சியை ஆரம்பித்தீர்கள் என சையத் ஹஸனிடம் கேட்டபொழுது, அவர் பேச ஆரம்பித்தார். அவரது பேச்சில் முதிர்ச்சியும், தெளிவும், அறிவின் கூர்மையும் காண முடிந்தது.

சூரியன் மற்றும் பூமியின் சுழற்சி குறித்து ஆய்வு தொடங்க வேண்டும் என்று எண்ணிய போது, நாகர்கோவிலில் பிறை தென்படுவதில் முஸ்லிம்களுக்குள் பிரச்னை ஏற்பட்டதை கேள்வியுற்றேன். முஸ்லிம்கள் பிறை பார்த்து கொண்டாடும் பெருநாள்களின் நாள்களை ஒன்றிணைக்க வேண்டும் என்கிற ஒரு ஆசை என்னுள் எழுந்த போதுதான் இந்தக் கடிகாரத்தின் வளர்ச்சிக்கு வேரிட்டது.



உலகக் கடிகாரத்தோடு காட்சிதரும் "சையத் ஹஸன்"

உலகக் கடிகாரத்தைக் கொண்டு சூரியனின் ஆண்டு சுழற்சி முறையை கணிக்கலாம். சந்திரனின் வட்டப் பாதை, இரவு பகல் எப்படி மாறி மாறி வருகிறது என்ற நிகழ்வுகளை அறிந்து கொள்ளலாம். ஒவ்வொரு ஊரிலும் பிறை எங்கே தென்படும், எந்த நேரத்தில் தென்படும் என்பதையும் துல்லியமாக அறியலாம். ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் வணக்க வழிபாட்டில் ஒன்றிணையலாம். பிறையை பார்த்தல், தகவலை தெரிவித்தல் ஆகியவற்றை தெளிவாக அறிந்து, ஒட்டுமொத்த உலக முஸ்லிம்களும் ஒற்றுமைபட பெரிய வாய்ப்புள்ளது எனவும், அதற்கான ஆதாரங்களை ஆணித்தரமாக விளாசுகிறார்.

இவரின் ஆய்வு இத்தோடு நின்றுவிடாமல், வானியலிலும் விரிந்து செல்கிறது. அனைத்திற்கும் திருக்குர்ஆனின் ஆழ்ந்த வாசிப்புதான் எனக்கு வித்திட்டது என அங்கலாய்க்கிறார். "சிந்திப்பவர்களுக்கு நிறைய சான்றுகள் உள்ளன." என்று இறைவன் திருக்குர்ஆனில் பல இடங்களில் கூறுவதை அடிக்கடி நினைவுபடுத்துகிறார்.

இன்று பெரும்பாலானவர்கள் விஞ்ஞானத்தைப் பார்த்துவிட்டு, அதன் சிந்தனையிலேயே திருக்குர்ஆனை நபிமொழிகளையும் நோக்குகின்றனர். அது மிகப்பெரிய தவறு! அதனாலேயே இன்று பல நபிமொழிகள் மறுக்கப்படுவதற்கான காரணங்களாகவும் அமைந்து விடுகிறது. திருக்குர்ஆனின் கோணத்தில்தான் விஞ்ஞானத்தை அணுக வேண்டும். இதுவே முறையானதாகும் என்கிறார்.

கடிகாரத்தின் தற்போதைய நிலை குறித்து அவர் கூறும் போது, அரசாங்கத்தின் Pattern Rights என்ற உரிமத்திற்கு விண்ணப்பித்து இருப்பதாகவும், அந்த அரசாங்க உரிமம் பெற மிகுந்த சிரமங்கள் இருப்பதாகவும், அந்த உரிமம் பெற்ற பிறகே மேற்படி கடிகாரத்தின் பரப்புரை சார்ந்த எந்த நடவடிக்கையும் எடுக்க முடியும் எனவும் தெரிவிக்கிறார்.

மேலும், கடிகாரத்தை குறித்த ஆய்வில், இஸ்லாமிய அறிஞர்களின் உதவியும், ஆதரவும், ஊக்குவிப்பும் வேண்டுமெனவும், சில இடங்களில், தான் நிராகரிக்கப்படுவதாகவும், ஒதுக்கப்படுவதாகவும் வேறு சில இடங்களில் தான் மட்டுப்படுத்துவதாகவும் வருத்தப்படுகின்றார்.

இதற்காக இரண்டு ஆண்டுகள் செலவாகியுள்ளன. 24Hours Running Motor for Clock என்ற இந்த மோட்டாரைத் தேடி, இந்தியாவில் கிடைக்காததால், சீனாவிலிருந்து செலவு செய்து வரவழைக்கப்பட்டது. இந்த இரண்டு ஆண்டுகளில் ஆன செலவுகள் ஏராளம். கணக்கில் தெரிந்து இரண்டு லட்சம் மட்டும்தான்.

இந்த ஆராய்ச்சியின் இலக்கு ஒரு சிறப்பான கண்டுபிடிப்பை நோக்கி உள்ளது. அந்த இலக்கின் பயணத்தில் வெளிப்பட்டதே இந்தக் கடிகாரம். இதன் உண்மையான நோக்கத்தையும் சிறப்பையும் கடிகாரத்தின் வெற்றியைப் பொறுத்து வெளியிடப்படும் என்கிறார்.

இறைமறையில் உள்ள இறைச் செய்தியை படித்ததால் கிடைத்த இவ்விஷயங்கள் இன்னும் முடிந்து விடவில்லை. சிந்தித்துக் கொண்டே இருப்பவர்களுக்கு பல அத்தாட்சிகள் நிறைந்து காணப்படுகின்றன. வருங்காலத்தில் சூரிய கிரகணம், சந்திர கிரகணம் எப்போது ஏற்படும் என்பதையும், எல்லா நாடுகளின் மாநிலங்களில் உள்ள ஒவ்வொரு ஊரிலும் தற்போது என்ன நேரம் இருக்கும் என்பதையும் துல்லியமாக சொல்ல முடியும் என்று கூறி, இப்போதைக்கு இவ்வளவு விஷயங்கள் மட்டுமே வெளியே சொல்ல முடியும் என முடித்து கொள்கிறார்.

திருக்குர்ஆனின் ஆழ்ந்த பார்வையாலும், அகண்ட சிந்தனையாலும், விடா முயற்சியாலும் கிடைக்கப்பெற்ற பெரிய இலக்கின் சிறிய வெற்றியாகவே இவர் இதைப் பார்க்கிறார். இன்னும் பல கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து, தன் மார்க்கத்திற்கும், தன் சமுதாயத்திற்கும், தன் நாட்டுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்ற இலட்சிய வேட்கை இவரை ஆட்கொண்டுள்ளது.

வாழ்வின் நோக்கத்தை அறிந்து வீரியத்தோடு செயலாற்றுகின்ற அனைவருக்காகவும் வெற்றி காத்துக் கொண்டிருக்கிறது. செயல்பட வேண்டியதுதான் நம் கடமையாக உள்ளது. இறைவன் புறத்திலிருந்து ஒவ்வொருவருக்கும் ஒரு திறமை நிச்சயமாக தரப்பட்டுள்ளது. அதனை இனம் கண்டு, அதில் நம்மை வளர்த்துக் கொண்டு, நம் சமுதாயத்தை தலை நிமிர வைக்கவேண்டும்.

சையத் ஹஸன் அவர்களின் இந்த முயற்சியை ஊக்குவிக்க வேண்டும். பாராட்ட வேண்டும். நம்மால் ஆன உதவியைச் செய்ய வேண்டும். இஸ்லாமிய அறிஞர்கள், கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், அறிவு ஜீவிகள் ஆகிய அனைவரும் சையத் ஹஸனின் வளர்ச்சிக்கு தங்களால் ஆன உதவியைச் செய்ய வேண்டும். தமிழக அரசு கடிகாரத்தின் காப்புரிமையை விரைவிலேயே அங்கீகரித்து, அவரை உலக அரங்கில் வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும் என "அழைப்பொலி" அழுத்திச் சொல்லி, அவரை அடையாளப்படுத்துவதில் அக மகிழ்வடைகிறது.




# இஸ்லாமியக் கொள்கையை அறிந்து கொள்வோம் - 5

சென்ற இதழ் தொடர்ச்சி...

### வானவர்களை நம்புவது

இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கையில் பிரதானமான ஒன்று கண்ணியமிக்க வானவர்கள் குறித்து நம்பிக்கை கொள்ளுதல் ஆகும். அவர்களில் யாருடைய பெயர்கள், பணிகள், பண்புகள் பற்றிய ஆதராமுள்ளதோ அவர்களைப் பற்றி விரிவாகவும் அறிந்து கொள்ள வேண்டும்.

(இறை) தூதர், தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பெற்றதை நம்புகிறார்; (அவ்வாறே) முஃமின்களும் (நம்புகின்றனர்; இவர்கள்) யாவரும் அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவர்களுடைய தூதர்களையும் நம்புகிறார்கள். (அல்குர்ஆன் 2:285)

ஈமானின் அடிப்படையில் ஒன்றான வானவர்கள் குறித்த நம்பிக்கையை யார் மறுத்து விடுவார்களோ அவர்கள் இஸ்லாத்தை விட்டு வெளியேறி விடுவார்கள்.

முஃமின்களே! நீங்கள் அல்லாஹ்வின் மீதும், அவனுடைய தூதர் மீதும், அவன் தூதர் மீது அவன் இறக்கிய (இவ்)வேதத்தின் மீதும், இதற்கு முன்னர் இறக்கிய வேதங்களின் மீதும் ஈமான் கொள்ளுங்கள்; எவர் அல்லாஹ்வையும், அவனுடைய வானவர்களையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், இறுதிநாளையும் (நம்பாமல்) நிராகரிக்கிறாரோ அவர் வழிகேட்டில் வெகுதூரம் சென்றுவிட்டார். (அல்குர்ஆன் 4:136)

வானவர்கள் என்பவர்கள் அல்லாஹ்வின் இறைச்செய்தியை எடுத்துச் சொல்பவர்கள். இறைவனை எந்நேரமும் புகழ்பவர்கள் ஆவர்.

### வானவர்கள் ஒளியினால் படைக்கப்பட்டவர்கள்;

“மலக்குகள் ஒளியினால் படைக்கப்பட்டார்கள். ஜின்கள் நெருப்பு ஜூவாலையால் படைக்கப் பட்டார்கள். ஆதம்(அலை) அவர்கள் உங்களுக்கு விவரிக்கப்பட்டவாறு (களிமண்ணால்) படைக்கப்பட்டார்கள்.” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் 2996)

### வானவர்களை நாம் எவ்வாறு நம்பிக்கை கொள்ள வேண்டும்?

1. அவர்கள் இருப்பதை உண்மைப்படுத்த வேண்டும்
2. அவர்களுக்குரிய அந்தஸ்தை வழங்க வேண்டும். அவர்களும் மனிதர்கள், ஜின்கள் மற்றும் ஏனைய படைப்புகளைப் போன்று அல்லாஹ்வின் அடியார்கள் என்றும், அவனது படைப்புகள் என்றும் உறுதி செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய ஆற்றல்களுக்கு மேல் எவ்வித ஆற்றலுமில்லை எனவும் வானவர்களும் மரணிப்பார்கள் என்றும் நம்ப வேண்டும்.
3. அவர்களை அல்லாஹ் மனிதர்களில் தான் நாடியவர்களிடம் தூதராக அனுப்பி வைப்பான் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். இன்னும் அவர்களில் சொர்க்கத்தையும் நரகத்தையும் பாதுகாப்பவர்களும், அல்லாஹ்வின் அர்ஷை சுமப்பவர்களும், அடியார்களின் செயல்களை கண்காணிப்பவர்களும் உள்ளனர்.

வானவர்களின் எண்ணிக்கையை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள்.

உமது இரட்சகனின் படைகளை(வானவர்களை) அவனையன்றி வேறெவரும் அறியமாட்டார்கள். (அல்குர்ஆன் 31:74)

(ஏழாம் வானத்தில் வைத்து) எனக்கு பைதுல் மஃமூர் எனும் இறை இல்லம் எடுத்துக் காட்டப் பட்டது. அதைப் பற்றி ஜிப்ரீல்(அலை) அவர்களிடம் கேட்டேன். இதுதான் பைதுல் மஃமூராகும். ஒவ்வொரு நாளும் 70,000 மலக்குகள் இங்கே நுழைந்து தொழுகிறார்கள். அதிலிருந்து வெளியேறியவர்கள் மறுபடியும் அதனுள் நுழைவதில்லை என நபி(ஸல்) கூறினார்கள். (புகாரி3207)

ஒரு நாளைக்கு பைதுல் மஃமூருக்கு நுழைகின்ற 70,000 மலக்குகள் மறுபடியும் அம்மஸ்ஜிதுக்குள் நுழைவதில்லை என்றால் இதுவரை நுழைந்த வானவர்களின் எண்ணிக்கையும், உலகம் அழியும் வரை நுழையப் போகின்ற வானவர்களின் எண்ணிக்கையும் நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர யாரும் அறியமாட்டார்கள். இது தவிர ஏனைய வானவர்களின் எண்ணிக்கையும் எவரும் அறிய மாட்டார்கள்.

### வானவர்களை காண முடியுமா?

தொடரும்... அடுத்த இதழில்...

மகளிர்க்காக...

# சொன்னதெல்லாம் உண்மை...

ஏ.ஆர். கமருன்னிசா தைய்யிபா

நல்ல செயலை செய்தவர் அவர் ஆணாக இருந்தாலும் சரியே, பெண்ணாக இருந்தாலும் சரியே, இறைநம்பிக்கை கொண்டவராக இருந்தால் அவர் தூய்மையான வாழ்க்கையை வாழச் செய்வோம். அவர்கள் செய்த செயல்களுக்கு ஏற்ப நிறைவான கூலியை மறுமையில் அவர்களுக்கு வழங்குவோம்.” (அல்குர்ஆன் 16 : 97)

மனிதர்களில் பலர், “பெண் புத்தி பின்புத்தி; அடுப்பூதும் பெண்ணுக்கு கல்வி எதற்கு?” என பெண்களின் பல உரிமைகளைப் பார்க்கின்றனர். இதனால் அவர்களின் வாரிசுகளின் அறிவில் குறைவு ஏற்படுவது மட்டுமல்லாமல் சமூகத்திலும் அறிவின் பஞ்சம் ஏற்பட்டு விடுகிறது.

“தாயின் மடிதான் முதல் பாடசாலை” என்ற அரபி பழமொழி உண்டு.

“மகளிர் தினம்” என்ற ஒன்றை ஏற்படுத்தி மகளிரைப் போற்றுவோம் என கோஷமிட்டாலும், பாலியல் பலாத்காரம், வரதட்சணை கொடுமை, பெண்வதை என தொடருகின்றது. **தமிழகத்தில் மட்டும் கடந்த ஆண்டு 943 கற்பழிப்பு வழக்குகளும், 2013 பாலியல் வன்கொடுமைகளும், 1250 வரதட்சணை கொடுமைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

“ஓதுவீராக! உம் இறைவன் கண்ணியமிக்கவன்! அவனே எழுதுகோலைக் கொண்டு எழுத்தறிவித்தான்! மனிதனுக்கு அறியாததை எல்லாம் கற்றுக் கொடுத்தான்.” (அல்குர்ஆன் 96 : 15)

இறைவசனம் சொன்ன உண்மையின்படி, நபி (ஸல்) அவர்களின் மனைவி அன்னை ஆயிஷா (ரலி) அவர்களிடம், உயர் பெரும் நபித்தோழர்களும், ஆட்சியாளர்களும் அணுகி வழிகாட்டுதலைப் பெற்றனர். ஏறத்தாழ 2210 நபிமொழிகளையும் அவர் அறிவித்துள்ளார். 88 மார்க்க அறிஞர்களும் இவரிடம் கல்வி கற்றுத் தேர்ந்துள்ளனர். ஏனெனில் அறிவிற்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், பெண்களின் கட்டாயக் கல்விக்கும் இஸ்லாம் முக்கியத்துவம் வழங்கியுள்ளது.

“கணவனுக்கு மனைவி ஆடையாகவும், மனைவிக்கு கணவன் ஆடை (2 : 186)களைப் போன்றவர்கள் என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. இவ்வசனத்தில் சொன்ன உண்மையை நிராகரிப்பதால், மனிதன் தன் குடும்ப கௌரவத்தை இழந்து “சொல்வதெல்லம் உண்மை” எனும் நிகழ்வில் பங்கேற்க முற்படுகிறான். தன் மானத்தை இழந்து, தன்னைத் தானே கேவலப்படுத்தி, இம்மை மறுமை வாழ்விலும் நஷ்டம் அடைந்தவனாகிறான்.

திருமணத்தின் போது பெண்ணுக்கு “மஹர் (திருமணக் கொடை) ஆண் கொடுப்பதை இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது.

“மேலும் பெண்களுக்கு அவர்களுக்குரிய மஹரை மனமுவந்து அளித்து விடுங்கள்.” (திருக்குர்ஆன் 4 : 4)

இவ்வசனம் சொன்ன உண்மை ஏற்றுக்கொள்ளாத நிலையில், **வரதட்சணை எனும் பெயரால் பெண் வீட்டாரிடம் பணம் பெற்று நடக்கும் திருமணத்தில் இறைக் கோபமே மிஞ்சுகிறது. குடும்பத்தில் மன நிறைவும், மன அமைதியும் கானல் நீராகிறது.**

தாய்மொழி தாய்நாடு என பெருமை பேசி உலவிக் கொண்டிருந்தாலும், மகளிரைப் போற்றாத இல்லம் நிம்மதி இழந்த இல்லமாகவே இருக்கிறது.

மகளிரின் பெருமையும், மாண்புகளையும், வர்ணிக்காத கவிஞனும் இல்லை. “மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை” என ஆசைகளிலும் இடம் பெற்ற பெண்ணின் தனிச் சிறப்பை எழுதாத கலைஞனின் எழுதுகோலும் இல்லை. இதை உணராத மனிதன் வேதனைக்குள்ளாகிறான்.

“நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : தனது குடும்பத்தாரிடத்தில் (மனைவி) எவன் நல்லவிதமாக நடந்து கொள்கின்றானோ? அவன் சிறந்தவன். நான் எனது மனைவியரிடத்தில் சிறந்த முறையில் நடந்து கொள்கிறேன். (ஆதாரம் : திர்மிதி)



பெண்களை இழிவு படுத்தும் குடும்பத்தில் வேதனை ஆட்கொள்கிறது. இதை ஒவ்வொரு தனி மனிதனும் உணர்ந்தால் சமுதாயமே உயரும்.

பொருளாதாரத்தை ஈட்டவும், தான் நினைத்தபடி செலவிடவும் பெண்களுக்கு உரிமை தராத குடும்பங்களில் பலர் தங்களுடைய வாழ்நாளின் பாதி நேரத்தை “கோர்ட்” (நீதிமன்றங்களில்) கழிக்கின்றனர். ஆனால் தனக்கு உரிமையான பொருளைக் கொண்டு ஒரு ஆண் என்னவெல்லாம் இறைக்கட்டளையின்படி செய்ய முடியுமோ? அது போல அனைத்துப் பெண்ணும் செய்யலாம். சொத்து உரிமையாக பெண்ணின் பங்கு வழங்கப் படாததால் அப்பெண் பாதிப்புகுள்ளாகிறாள். ஆனால் “சொத்தில் 2 மடங்கு ஆணிற்கும், 1 மடங்கு பெண்ணிற்கும் உள்ளதாகும்.”

“இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் யார் கட்டுப்பட்டு நடக்கிறார்களோ?” அவர்களை அவன் சொர்க்கப் பூஞ்சோலைகளில் நுழைய வைப்பான். யார் மீறுகிறாரோ? அவரை அவன் நரகத்தில் நுழையச் செய்வான். அதில் அவருக்கு இழிவு தரும் வேதனையும் உண்டு.” (அல்குர்ஆன் 4 : 12)

இறைச் செய்திகளை “சொன்னதெல்லாம் உண்மைப்படுத்துவதாலேயே வெற்றி அடைவோமாக.

# பொறுத்தார் பூமி ஆள்வார்!

**மௌலானா அபுல் கலாம் ஆஸாத்**




பதினேழு வயதே ஆன பதின்பருவத்து சிறுவனை (யூசுப் நபி) அவருடைய தந்தையின் அன்பான அரவணைப்பிலிருந்து வலுக்கட்டாயமாகப் பரிக்கின்றார்கள். பாழுங் கிணற்றில் அவர் போடப்படுகின்றார். பிறகு சில ரூபாய்களுக்காக அவர் அடிமையாக விற்கப்படுகின்றார்.

இதுபோன்ற இக்கட்டான வேளைகளில் இலட்சக்கணக்கான மனிதர்கள் எப்படி நடந்து கொள்வார்கள்? எப்படியெல்லாம் புலம்பித் தீர்ப்பார்கள்? ஆனால், அந்தப் பதின் பருவத்து சிறுவர் எப்படி நடந்து கொண்டார்?

அவருடைய வாழ்வைப் படிக்கின்ற போது திடீரென்று அந்தப் பதின்பருவத்து சிறுவன் ஒரு தேர்ந்த அறிவாளியைப் போன்று தன்னுடைய நிலைமைகளை முழுமையாக ஆராய்ந்து சூழல்களும் நிலைமைகளும் எப்படியெல்லாம் மாறினாலும் அவையனைத்தையும் பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் எதிர் கொள்ள வேண்டும்; நிலைமைகளுக்கேற்ப வாழ வேண்டும் என்கிற தீர்க்கமானதோர் முடிவை எடுத்து விட்டதைப் போலத் தோன்றுகின்றது.

அவரை அந்தக் கிணற்றிலிருந்து கொண்டு போன வணிகக் கூட்டத்தினர் அவரை அடிமையாக விற்றுவிட்டார்கள். அவரும் தம்மை அடிமையாகவே ஆக்கிக் கொண்டார். மறுக்கவில்லை. முரண்டு பிடிக்கவில்லை. அழுது அரற்றவில்லை. நான் அடிமை இல்லை என வாதிடவில்லை.

எகிப்திய எஜமானன் அவரை அடிமையாகத்தான் விலைக்கு வாங்கிக் கொண்டார். அவரும் அந்த எஜமானருக்கு அடிமையாகவே சேவையாற்றத் தொடங்கிவிட்டார். இவ்வாறு நடந்துகொள்வதில் அவருக்குத் தயக்கம் இருந்ததாகவோ, முரண்டு பிடித்ததாகவோ ஒரு தகவலும் எதிலும் இல்லை.

அதாவது இது போன்ற மிகப்பெரும் துயரத்தை எதிர் கொள்கின்றபோது ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மனிதர்கள் உடைந்து போய் விடுவதைப் போன்று, வாழ்நாள் முழுக்க பால்ய பருவத்து சுதந்திரத்தையும் சொகுசுகளையும் நினைத்து நினைத்து வருந்தித் துயருறுவதைப் போன்று, ஒவ்வொரு நாளும் தாம் சந்திக்கின்ற நிலைமைகளை அவமானங்களை நினைத்து நினைத்து மூச்சுக்கு மூச்சு செத்துப் பிழைப்பதைப் போன்று அவருக்கு எதுவுமே ஆகவில்லை. தன்னுடைய சொந்த விருப்பத்துடன் வாழ்வின் ஒரு சொகுசை விட்டுவிட்டு இன்னொரு சொகுசை வலிந்து ஏற்றுக்கொள்வதைப் போன்று இருந்தது அவருடைய நடத்தை. கடந்த காலத்தை நினைத்து புலம்பவும் இல்லை. தற்காலத்தை ஏற்றுக்கொள் வதில் தயக்கமும் இல்லை. எதிர்கால நிலைமைகள் எப்படியெல்லாம் மாறப்போகின்றனவோ என்கிற பயத்தாலும் அச்சுறுத்தலாலும் அவர் உடைந்து போகவும் இல்லை.

தீரமும் உறுதியும் நிறைந்த விவரமான மாலுமியைப் போன்று கரையை விட்டுவிட்டு வந்துவிட்டோமே என்கிற கவலையோ, புயல் வந்து தாக்குமோ என்கிற பயமோ இல்லாமல் துணிவுடனும் தீரத்துடனும் தன்னுடைய இலக்கை நோக்கி கப்பலைச் செலுத்துகின்ற மாலுமியைப் போன்று அவர் நடந்துகொண்டார். தெளிவான எண்ணத்துடனும் தீர்க்கமான முடிவுடனும் அவர் தன்னுடைய வாழ்க்கைக் கப்பலை ஓட்டிச் சென்றார். இறுதியில் தன்னுடைய வாழ்வின் இலக்கை சென்று அடைந்தார்.

**கடந்த காலத்தை நினைத்து புலம்பவும் இல்லை. தற்காலத்தை ஏற்றுக்கொள்வதில் தயக்கமும் இல்லை. எதிர்கால நிலைமைகள் எப்படியெல்லாம் மாறப்போகின்றனவோ என்கிற பயத்தாலும் அச்சுறுத்தலாலும் அவர் உடைந்து போகவும் இல்லை.**

“நன்றாக ஆய்ந்து, சிந்தித்துப் பாருங்கள். உலக வாழ்வில் தாம் எதிர்கொள்கின்ற துன்பங்களையும் பாதகமான சூழல்களையும் நெருக்கடிகளையும் கீறிக் கொண்டு தமக்கென தனி பாதை அமைத்துக்கொள்ள விரும்புகின்ற ஒவ்வொரு மனிதருக்கும் இதில் மிகப்பெரும் பாடம் இருக்கின்றது.”

எதிர்பாரா விபத்துகளையும் திடீர் துயரங் களையும் இன்னல்களையும் கொண்ட கூட்டிலிருந்து அவர் மீது வீசப்பட்ட ‘வில்லை’ விடப் பெரிய ‘வில்’ வேறு ஏதேனும் உண்டா? ஆனால் எண்ணிலடங்கா மனிதர்களின் உள்ளங்களை நொறுக்கிவிடுகின்ற ஆற்றல் படைத்த அந்த ‘வில்’ அவர் மீது விழுந்த போது அவர் பொறுமையின் மலையாய், நிதானத்தின் குன்றாய் நின்றார். ‘வில்’ விர்ரென்று அவர் மீது பாய்ந்தது. சின்னத் துரும்பாய் அவருடைய காலடியில் விழுந்துவிட்டது. அவர் எந்த அளவுக்கு எந்தவிதமான சிராய்ப்புமில்லாமல் அந்த நெருக்கடிகளைக் கடந்து சென்றார் எனில் அவருடைய வாழ்வில் எந்தத் துயரமும் நெருக்கடியும் நடக்கவே இல்லையோ எனத் தோன்றும்.

நன்றாக ஆய்ந்து, சிந்தித்துப் பாருங்கள். உலக வாழ்வில் தாம் எதிர்கொள்கின்ற துன்பங்களையும் பாதகமான சூழல்களையும் நெருக்கடிகளையும் கீறிக் கொண்டு தமக்கென தனி பாதை அமைத்துக் கொள்ள விரும்புகின்ற ஒவ்வொரு மனிதருக்கும் இதில் மிகப்பெரும் பாடம் இருக்கின்றது.

துன்பமும் நெருக்கடியும் தம்மை முதன்முதலாகத் தாக்கிய போது பொறுமையையும் தீரத்தையும் மன உறுதியையும் தன்னம்பிக்கையையும் இறைவனையே சார்ந்திருக்கின்ற பண்பையும் தம்மிடம் தோற்றுவித்துக் கொண்டிருந்திரா விட்டால் அவர் கடைசியில் சென்று சேர்ந்த வாழ்வின் இலக்கை அவரால் அடைந்து இருக்க முடியுமா ?

**நூல்: அன்பியாயே அக்ராம்**

**தமிழில்: டி.அஜீஸ் லுத்ஃபுல்லாஹ்**

இணைய தளம்...

## அன்றொரு நாள் அதே இரவில்....

இரவு நேரம்... அவ்வளவாக வெளிச்சம் இல்லை... கொஞ்சம் உற்றுப் பார்த்தால் தெரிந்து விடும், எதிரில் வருபவர் யார் என்று.

பள்ளிவாசலில் இருந்த நபி(ஸல்) அவர்களைப் பார்ப்பதற்காக அவருடைய துணைவியார் வருகிறார்.

பேசி முடித்தவுடன் துணைவியார் வீட்டிற்குப் புறப்படுகிறார்.

“இருள் சூழ்ந்துவிட்டதே” என்று தம் துணைவியா ருக்குத் துணையாக நபிகளாரும் வீடு வரை வருகிறார்.

எதிரில் நபித்தோழர்கள் ஓரிருவர் வருகின்றனர்.

நபிகளாரைக் கடந்துபோக முயல்கையில் நபி(ஸல்) அவர்கள் அந்தத் தோழர்களை அழைத்து, “தோழர்களே, இவர் என் மனைவி” என்கிறார்.

தோழர்கள் துடித்துப் போய்விட்டனர். “இறைத் தூதர் அவர்களே, நாங்கள் உங்கள் மீது ஐயம் கொள்வோமா?” என்றனர்.

‘அதற்கு நபிகளார்(ஸல்), “இரவு நேரம்.. வெளிச்சம் அவ்வளவாக இல்லை... முஹம்மத் யாரோ ஒரு பெண்ணுடன் இருளில் சென்று கொண்டிருந்தார் என்னும் தவறான செய்தி பரவி விடக் கூடாது அல்லவா? அதற்காகத்தான் இந்த விளக்கம்” என்றார்.

இவர்தான் தலைவர். இவர்தான் வழிகாட்டி.

ஐயமோ அவதூறோ இன்னின்ன வழிகளில்தான் கிளம்பும் என்பதை உணர்ந்து அந்த வழிகளையே முற்றாக அடைத்தவர்.

“இறைத்தூதரிடம் உங்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது” என்னும் இறைவாக்கியத்தை நாம் எல்லாருமே மறந்துவிட்டோமோ , மேடையலங்காரப் பேச்சுக்கு மட்டும் போதும் என்று சுருக்கிவிட்டோமோ எனும் அச்சம் மேலிடுகிறது.

**– சிராஜுல்ஹஸன்**



# சிந்திக்கத் தூண்டும் கேள்விகளும்; சுருக்கமான பதில்களும்

**இஸ்லாம் என்றால் என்ன ?**
**முஸ்லிம்கள் என்றால் யார் ?**

இஸ்லாம் இயற்கையான மற்றும் முழுமையான வாழ்க்கை நெறி ஆகும். அது மனிதன் தன்னுடைய படைத்த இறைவனுடனும் அவனுடைய படைப்பு களுடனும் இருக்க வேண்டிய உறவைப் பற்றி விளக்குகிறது.

மனிதனுக்கும் உண்மையான மகிழ்ச்சியும் மன நிம்மதியும் படைத்த இறைவன் வகுத்து கொடுத் துள்ள நற்செயல்களைச் செய்வதால் மட்டுமே கிடைக்கும்.

இஸ்லாத்தின் செய்தி எளிமையானது. ஓர் இறைவனை ஏற்றுக் கொண்டு அவனையே வழிபட வேண்டும். மேலும் முஹம்மத்(ஸல்) அவர்களை இறைவனின் இறுதி தூதராகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இஸ்லாம் என்ற சொல்லுக்கு இறைவனுக்கு முற்றிலும் அடிபணிவது என்று பொருளாகும். அதை யார் பின்பற்றுகிறார்களோ அவர்கள் முஸ் லிம்களாவர். அவர்கள் எந்த இனத்தையும் இடத்தையும் சார்ந்தவர்களாக இருக்கலாம்.

**அல்லாஹ் என்பது யார்?**

வணக்கத்திற்குரிய ஒரே இறைவனைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல் அல்லாஹ் என்பதாகும். அல்லாஹ்வுக்கு இணையோ, துணையோ, பெற்றோர்களோ குழந்தைகளோ கிடையாது.

அல்லாஹ்வின் பண்புகளாவன; அவனது அனைத்துப் பண்புகளும் பரிபூரணமானவை. படைத்தவன், கருணை மிக்கவன், வல்லமையாளன், நீதி மிக்கவன், ஞானமுடையவன் மற்றும் அனைத் தையும் அறிந்தவன் ஆகிய பண்புகளை கொண்டவன் ஆவான். அவன் யாவற்றையும் படைத்துப் பரிபாலிப்பவன். மனிதர்களை மரணிக்கச்செய்து, மறுமை நாளில் நியாயத் தீர்ப்பு வழங்குபவனும் அவனே. வணக்கத்துக்குரியவன் நித்திய ஜீவன்.

**குர்ஆன் என்றால் என்ன?**

குர்ஆன் மனித குலத்திற்காக இறைவனால் அனுப்பப்பட்ட இறுதி வேதமாகும். இது ஒரு வழிகாட்டியாகவும் மேலும் சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்டக் கூடியதாகவும் இருக்கிறது. இது இறைவனின் சொல்லாகும். வானவர் ஜிப்ரீல் மூலமாக முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு இறக்கியருளப்பட்டது. குர்ஆன் பல்வேறு விஷயங்களை விளக்குகிறது. மேலும் தெளிவுபடுத்துகிறது. உதாரணத்திற்கு வாழ்க்கையின் நோக்கம், இறைவனைப் பற்றிய சரியான கண்ணோட்டம். இறைவனால் விரும்பக் கூடிய செயல்களும் வெறுக்கத்தக்க செயல்களும், இறைத்தூதர்களின் வாழ்க்கை வரலாறும் அதன் படிப்பினைகளும், சொர்க்கம், நரகம், இறுதித் தீர்ப்பு நாள் ஆகியவை பற்றிய செய்திகள் இதில் அடங்கும்.

குர்ஆனின் மிகப்பெரிய அதிசயமும் அற்புதமும் என்னவென்றால் 1400 ஆண்டுகளாக அதில் எந்தவிதமான மாற்றமும் ஏற்படாமல் அப்படியே பாதுகாக்கப்பட்டுள்ளது. குர்ஆனில் நிறைய அறிவியல், வரலாற்று உண்மைகள் உள்ளன.

**இஸ்லாத்தில் எது பெரும் பாவம்?**

இறைவனைத் தவிர மற்றவர்களை வழிபடுவது, இறைவனுடன் மற்றவர்களை சேர்த்துக் கொள்வது அல்லது இறைவனுக்கு நிகராக மற்றவர்களையும் ஏற்படுத்துவது ஆகியவை இஸ்லாத்தில் பெரும் பாவமாகும். இறைவனின் பண்பு நலன்களை மற்றவர்களுக்கும் கொடுப்பது, இன்னும் இறை வனுக்கு மகன் உண்டு, தாய் உண்டு அல்லது இணை உண்டு என்று கற்பிப்பது அல்லது இறைவன் மீது நம்பிக்கை கொள்ளாமல் இருப்பது போன்றவையும் இதில் அடங்கும்.

**பெண்களை இஸ்லாம் எப்படி பார்க்கிறது?**

இஸ்லாத்தில் ஆண்களும் பெண்களும் இறை வனுக்கு முன் சமம். அவர்களுக்கு சமமாக நற்கூலி கொடுக்கப்படும். இன்னும் அவர்கள் செய்த செயல்களுக்கு அவர்களே பொறுப்பாளர்கள். இந்த இரு பாலரை படைத்த இறைவன் இருவருக்கும் அவர்களுடைய உடல் நிலையை கருத்தில் கொண்டு அவர்களுடைய பொறுப்புகளைக் கொடுத்துள்ளான். இஸ்லாத்தில் பெண்களுக்கு மிகப்பெரிய மரியாதையும் கண்ணியமும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆண் பெண் இருவரும் இணைகளாகப் படைக்கப் பட்டுள்ளனர்.


**ஹலால் உணவு என்றால் என்ன?**

ஹலால் அல்லது அனுமதிக்கப்பட்ட உணவு என்பது முஸ்லிம்கள் உண்ணுவதற்கு இறைவனால் அனுமதிக்கப்பட்டவையாகும். பொதுவாக பெரும்பாலான உணவுகளும் பானங்களும் அனுமதிக்கப்பட்டுள்ளன. பன்றி இறைச்சி, ரத்தம், மது ஆகியவைத் தவிர. மாமிசத்திற்காக அறுக்கப் படும் கோழிகள், ஆடுகள் போன்றவை முறையாகவும் மனிதாபிமான முறையிலும் அறுக்கப்பட வேண்டும். அறுக்கும் போது இறைவனின் திருநாமத்தை கொண்டும் பிராணிகளுக்கு அதிக துன்பம் வராமலும் அறுக்க வேண்டும்.

**மரணத்திற்குப் பின் என்ன நிகழும்?**

இந்தக் குறுகிய கால வாழ்க்கையிலிருந்து நிரந்தரமான மறுஉலக வாழ்க்கையின் பயணம்தான் மரணம். ஒவ்வொருவரும் அவர்கள் செய்த செயல் களுக்காக பதில் சொல்ல எழுப்பப்படுவார்கள்.

என். ஜான் முஹம்மத்




**வாசகர்களே!**
**உங்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் அனுப்ப வேண்டிய முகவரி:**
**"அழைப்பொலி" மாத இதழ்**
எண்.14(7-A), பி.பி.டி.ரோடு, தாங்கல்,
திருவொற்றியூர், சென்னை – 600 019.
அலைப்பேசி, வாட்ஸ்அப் : 9884928787
மின்னஞ்சல் : azhaippoli2017@gmail.com



# இணைய களம்

சமூக அமைப்புகள், ஜமாஅத் மற்றும் நிர்வாகம் போன்றவற்றில் பொறுப்பு வகித்து தீவிரமாக களப்பணியாற்றிய சில சகோதரர்கள்.... கருத்து வேறுபாடுகள் காரணமாக அந்த பொறுப்புகளில் இருந்து விலகிய உடன்.... அல்லது விலக்கப்பட்ட உடன்... அதிதீவிர நிலைக்கு (Extreme End) சென்று விடுகின்றனர்.

ஒன்று.... பொறுப்பு வகித்த அமைப்பை, அதன் தலைமையை பொது இடங்களில் பகிரங்கமாக விமர்சிப்பது.

அல்லது அமைதியாக தாங்கள் உண்டு தங்களது வேலை உண்டு என்று அனைத்து சமூகப்பணிகளி லிருந்தும் முற்றிலுமாக விலகி சென்றுவிடுவது.

முதிர்ச்சி இல்லாமல் எடுக்கப்படும் இதுபோன்ற முடிவுகளினால் சம்பந்தப்பட்ட நபருக்கு எந்த பாதிப்பும் இல்லை; பாதிப்புகள் முழுக்க உம்மத்திற்குத்தான்.

முறைப்படுத்தப்பட்ட மார்க்கக் கல்வி பயிலாத இன்றைய தமிழக முஸ்லிம் சமூகத்தில் கோளாறு களும் குற்றங்களும் நிறைந்துதான் இருக்கும் என்பது எதார்த்தம் அப்படிப்பட்ட குறைபாடுடைய சமூகத் திலிருந்து அவ்வப்போது அபூர்வமாக வெளிப்படும் சில ஆளுமைகள்.... குற்றம் குறை இல்லாத வானவர்களாக இருத்தல் வேண்டும் என்று யாரேனும் நினைத்தால்

அது அறிவீனத்தின் உச்சம். மட்டுமல்ல.... எதார்த்தத்திற்கு எதிரானது.

எந்த ஒரு சமூகம் தனது அறிஞர்களையும் ஆளுமைகளையும் ஒதுக்குகிறதோ கேவலப் படுத்துகிறதோ, அந்தச் சமூகம் தன் கையால் தன் தலைக்கு தீ வைக்கிறது என்று பொருள்.

அமைப்புகளில் இருந்து ஒதுங்கினாலும் ஓரங் கட்டப்பட்டாலும் சமூகப் பணி என்பது உயிருள் ளவரை செய்யவேண்டிய கடமையான பணி.

தளர்ந்து விடாதீர்.... ஓரங்கட்டப்பட்டாலும்.... ஒதுங்கிவிடாதீர்.

பயனுள்ள சமூகப் பணிகளை யார் செய்தாலும் அவர்களுக்கு ஆதரவாக நில்லுங்கள். அவர்களோடு இணைந்து பணியாற்றுங்கள். சமூகத்திற்கு செய்ய வேண்டியவை மலையளவு குவிந்து கிடக்கிறது.

CMN சலீம்

